

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் , நீரில் மூழ்கி உயிரிழந்த இருவர் குடும்பத்தினருக்கு ரூ.6 இலட்சத்திற்கான காசோலையினை நேற்று (18.09.2025) சிதம்பரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், சார் ஆட்சியர் டி.மாலதி, நகராட்சி ஆணையர் மல்லிகா ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்

# சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### மு.தென்னவன் – தமிழரசி எம்.எல்.ஏ. – சேங்கைமாறன் பங்கேற்பு!

சிவகங்கை, செப். 19 –

சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் சிவகங்கை ராயல் திருமண மண்டபத்தில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர், கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விளக்கி பேசினார்.

இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. வாழ்த்துரை வழங்கினார்.

சிறந்த மாநகர செயலாளராக தலைமை கழகத்தால் காரைக்குடி மாநகர செயலாளர் நா.குணசேகரனை தேர்வு செய்த கழக தலைவர் முதல்வர் தளபதி மற்றும் மாநில நிர்வாகிகளுக்கு செயற்குழு கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சுப.ம் மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, பொதுக்குழு உறுப்பினர்கள் த.உதயகுமார், ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, நகர் கழக செயலாளர்கள் சி.எம்.துரை ஆனந்த், க.பொன்னுச்சாமி, பெரி, பாலா மாநகர செயலாளர் நா.குணசேகரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், பெ.மந்தகாளை, துரை.ராஜாமணி, மா.அண்ணாதுரை, எம்.ஏ.கடம்பசாமி, சுப்பிரமணியன், ஆர்.எம்.கென்னடி, யோக.கிருஷ்ணகுமார், வே. ஆரோக்கியசாமி, பூபால சிங்கம் , நாகனி ரவி, லெ.மு. ரவிச்சந்திரன், கா .வெங்கட்ராமன், வே.தமிழ்மாறன், ஆறு. செல்வராஜன், விராமதி மாணிக்கம், பூமணி, கே.பாலசுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன் , சுப. சின்னதுரை, அ.முத்துச்சாமி, கே. ஆர். ஆனந்த் , பேரூர்கழகச் செயலாளர்கள் பி.ஏ.நஜுமுதீன், ஜெயராமன் கதிர்வேல், மாவட்ட மாணவரணிஅமைப் பாளர் கதி. ராஜ்குமார் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மகளிரணி நிர்வாகிகள் மணிமேகலை முத்துச்சாமி, மஞ்சுளா, திலகவதி கண்ணன், மாவட்ட மகளிரணி தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் , கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வேங்கை பிரியா, நிர்வாகிகள் சேவியர் , காளிமுத்து, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, ஐ.மதார், கோதண்டபானி, ஆர்.வி.எஸ்.அரங்க நாதன்,

ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி மற்றும் ஊராட்சி கழக ஒன்றிய கழக பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .

முடிவில் சிவகங்கை நகர் கழக செயலாளர் சி. எம். துரை ஆனந்த் நன்றி கூறினார்.

### பாளையங்கோட்டையில் சுதந்திரப் போராட்ட வீரர் – தியாகி

# வ.உ.சிதம்பரனார் வெண்கல திருவுருவச் சிலைக்கு நிழற்குடை அமைத்தல்!

### மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ராபர்ட் புரூஸிடம் நேரில் மனு வழங்கினார்!

நெல்லை, செப். 19 –

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் அமைந்துள்ள இந்திய சுதந்திர போராட்ட வீரர் தியாகி வ.உ.சிதம்பரனார் அவர்களின் வெண்கல திருவுருவச் சிலைக்கு படிக்கட்டுடன் கூடிய நிழற்குடை அமைப்பதற்கு நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸிடம் நேரில் சென்று மனு வழங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் அதற்காக 8 இலட்சம் நிதி ஒதுக்கி உடனடியாக சரிசெய்து தருவதாக உறுதி அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மனுவில் கூறியிருப்பதாவது.

திருநெல்வேலி மாநகரம் பாளையங்கோட்டை திருவனந்தபுரம் சாலையில் உள்ள வ.உ.சி மைதானத்தில் இந்திய சுதந்திர போராட்ட வீரர் செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் தியாகி வ.உ.சிதம்பரனாரின் வெண்கல திருவுருவ சிலை அமைந்துள்ளது. இந்திய சுதந்திர போராட்ட வீரர் தியாகி வ.உ. சிதம்பரனாரின் பிறந்தநாள் மற்றும் நினைவு நாளன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், ஆயிரக்கணக்கான பொதுமக்களும் வ.உ.சிதம்பரனாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

மேலும் தரையில் இருந்து வ.உ.சிதம்பரனாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கவும், மரியாதை செலுத்தவும் ஏதுவாக பாதுகாப்பான படிக்கட்டுகள் இல்லாததால் மிகவும் சிரமமான சூழ்நிலை உள்ளது. ஆகவே திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி வ.உ. சிதம்பரனாரின் திருவுருவச் சிலைக்கு பாதுகாப்புடன் கூடிய படிக்கட்டும், மேலே நிழற்குடையும் அமைத்து தரவேண்டும். என்று கூறியிருந்தார்.

மனுவை பெற்றுக் கொண்ட திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ் உடனடியாக நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 8 இலட்சம் ஒதுக்கி நிழற்குடையுடன் கூடிய படிக்கட்டுகள் அமைத்து தருவதாக உறுதி அளித்துள்ளார்.

நிகழ்வில் நெல்லை பேட்டை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் கோபி, காங்கிரஸ் நிர்வாகி ராஜேஷ்,மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், மாநகர விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஷெட்டி, மானூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்திக், மாநகர அயலக அணி துணை அமைப்பாளர் அந்தோணி ராஜ், மாநகர மாணவரணி வினோத் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.





புதுவையில் சுகாதாரமற்ற குடிநீர் விநியோகத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட மக்கள் நல பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக பேரவையை ஐந்து நாட்கள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து பேரவைத் தலைவர் முன்பு தர்ணாவில் ஈடுபட்ட புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா உள்ளிட்ட தி.மு.க. – காங்கிரஸ் உறுப்பினர்கள் சபைக்காவலர்களால் குண்டுகட்டாக வெளியேற்றப்பட்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலத்தில் 16.09.2025 செவ்வாய்க்கிழமை அன்று மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியதைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்டம், நீலமங்கலம் தனியார் பள்ளிக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் வழங்கினார்கள், இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட இயக்குநர் சு.சுந்தர்ராஜன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆர்.ரஞ்சித், மகளிர் சுய உதவிக் குழுவினர் உள்ளிட்டப் பலர் கலந்து கொண்டனர்.

### காசாவில்

# அப்பாவி மனிதர்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, செப். 19 -**

**காசாவில் அப்பாவி மனிதர்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

உயிருக்குப் போராடும் காசா, உலகம் கண்டுகொள்ளாமல் இருக்கக் கூடாது!

காசாவில் அரங்கேறி வரும் கொடுமைகளால் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு அதிர்ந்து போயிருக்கிறேன். அங்கிருந்து வெளிவரும் ஒவ்வொரு காட்சியும் நெஞ்சைப் பதறச் செய்கிறது.

பச்சிளம் குழந்தைகளின் அழுகுரல், பட்டினியில் தவிக்கும் சிறார்கள், மருத்துவமனைகள் மீது நடத்தப்படும் குண்டுவீச்சு, ஐ.நா. விசாரணை ஆணையமே அங்கு இனப்படுகொலை நடந்து வருவதாக அளித்துள்ள அறிக்கை ஆகிய அனைத்தும், எந்த மனிதரும் எப்போதும் அனுபவிக்கக் கூடாத துன்பங்களை அங்கு அனுபவித்து வருவதையே காட்டுகிறது.

அப்பாவி மனித உயிர்கள் இப்படி கொல்லப்படும்போது, அமைதியாக இருப்பது என்பது ஒரு தேர்வாக இருக்க முடியாது. நம் ஒவ்வொருவரின் மனசாட்சியும் விழிக்க வேண்டும். இந்தியா உறுதியான நிலைப்பாட்டோடு பேச வேண்டும், உலகம் மொத்தமும் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடூரத்தை இப்போதே தடுத்து நிறுத்த நாம் அனைவரும் இணைந்து செயல்படவேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சுகாதாரமற்ற குடிநீரால் உயிரிழந்த குடும்பத்திற்கு நிவாரணம் உள்ளிட்ட

# மக்கள் பிரச்சினைகளை விவாதிக்க பேரவையை ஐந்து நாட்கள் நடத்தக் கோரி தர்ணா!

### எதிர்க்கட்சித் தலைவர் சிவா உள்ளிட்ட தி.மு.க. – காங்கிரஸ் உறுப்பினர்கள் குண்டுக்கட்டாக வெளியேற்றம்!

புதுச்சேரி, செப். 19–

சுகாதாரமற்ற குடிநீர் விநியோகத்தால் உயிரிந்தவர்களின் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட மக்கள் நல பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக பேரவையை ஐந்து நாட்கள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து பேரவைத் தலைவர் முன்பு தர்ணாவில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா உள்ளிட்ட தி.மு.க. – காங்கிரஸ் உறுப்பினர்கள் சபைக் காவலர்களால் குண்டுக்கட்டாக வெளியேற்றப்பட்ட சம்பவம் பேரவை வளாகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

15–வது சட்டப்பேரவையின் ஆறாவது கூட்டத் தொடரின் இரண்டாவது பேரவைக் கூட்டம் நேற்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது. குறள் வாசித்து சபாநாயகர் பேரவையைத் தொடங்கி வைத்தார். தொடர்ந்து மறைந்த போப் பிரான்சிஸ், கேரளா முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன், ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் சிபுசோரன், புதுச்சேரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்சிவலோகநாதன், முன்னாள் ஆளுநர் இல.கணேசன் ஆகியோருக்கு இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் எழுந்து நின்று மவுன அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து, பேரவையைத் தொடங்கியபோது, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா எழுந்து, குடிநீர் பிரச்சினையால் ஆறு பேர் உயிரிழந்துள்ளது குறித்தும், மக்கள் நல பிரச்சினைகள் குறித்தும் விவாதிப்பதற்காக பேரவையை ஐந்து நாட்கள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். அதே கோரிக்கையை தி.மு.க.–காங்கிரஸ் உறுப்பினர்களும் கோரினர். ஆனால் அதற்கு பேரவைத் தலைவர் பதிலளிக்காமல் தொடர்ந்து பேரவையை நடத்தினார். அப்போது, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் தி.மு.க.–காங்கிரஸ் உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் இருக்கை முன்பு நின்றுகொண்டு தர்ணாவில் ஈடுபட்டனர். அப்போது பேரவையை ஐந்து நாட்கள் நடத்த வேண்டும் என்று கோஷம் எழுப்பினர்.

அதனைத் தொடர்ந்து பேரவைத் தலைவர் உத்தரவின்பேரில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, தி.மு.க. உறுப்பினர்கள் நாஜீம், அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், நாகதியாகராஜன், காங்கிரஸ் உறுப்பினர்கள் வைத்தியநாதன், ரமேஷ் பரம்பத் ஆகியோர் சபைக்காவலர்களால் குண்டுக்கட்டாக வெளியேற்றப்பட்டனர். வெளியேற்றப்பட்ட தி.மு.க.–காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் சபாநாயகர் அல்லது முதல்வர் அழைத்து பேசும்வரை தர்ணாவில் ஈடுபடுவது என்று கூறி சபைக்கு வெளியில் தரையில் அமர்ந்து தொடர் தர்ணாவில் ஈடுபட்டனர். இதனால் சட்டப்பேரவை வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, புதுச்சேரி மாநிலத்தில் சுகாதாரமற்ற முறையில் குடிநீர் விநியோகத்தால் ஆறு உயிர்களை நாம் இன்று இழந்துள்ளோம். இன்னும் இதில் எத்தனைபேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அரசு வெளியிடவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு நிவாரணம் வழங்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களை முதல்வரோ, அமைச்சர்களோ இன்னும் நேரில் சென்று பார்க்கவில்லை. குடிநீரை அருந்துவதற்கு மக்கள் அஞ்சுகின்ற நிலை உள்ளது.

**செயல்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை!**

புதுச்சேரி மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் தரமாக வழங்க வேண்டும் என்பதற்காக கடந்த காலங்களில் சொல்லப்பட்ட ஊசுட்டேரி குடிநீர் திட்டம், ஆற்றுப் படுகையில் இருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டுவரும் திட்டம், சங்கராபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம், ஏ.எப்.டி. திட்டம், கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் ஆகியவற்றை கிடப்பில் போட்டுள்ளனர். அதை செயல்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை.

இந்த அரசு பொறுப்பேற்றதில் இருந்து கல்வித் துறையில் மிகப் பெரிய கோளாறு ஏற்பட்டு மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். புதுச்சேரி அரசு சென்ற ஆண்டு வரை தமிழ்நாட்டின் பாடத் திட்டமான சமச்சீர் கல்வித் திட்டத்தையும், இருமொழிக் கொள்கையையும் பின்பற்றி வந்தது. ஒன்றிய பா.ஜ.க.வின் நெருக்கடியால் சமச்சீர் கல்வித் திட்டத்தை நிறுத்திவிட்டு சி.பி.எஸ்.இ. என்ற பெயரில் புதிய கல்விக் கொள்கையை திணித்து மாணவர்களின் கல்வித் தரத்தை சிதைக்க துவங்கி உள்ளது. புதுச்சேரி மாநிலத்தில் வருங்கால மாணவர்கள் தாய்மொழி வழியில் கல்வி பயில ஏதுவாக 12–ஆம் வகுப்பு வரை தமிழ் மொழியை கட்டாயமாக்க செய்ய வேண்டும்.

உள்ளாட்சித் துறையில் கடந்த 10 ஆண்டுகாலமாக துப்பரவு பணி செய்து வந்த ஸ்வட்சதா பாரத் நிறுவனம் டன் ஒன்றுக்கு ரூ. 1,600–ல் தொடங்கி தமது 10–வது ஆண்டில் இறுதியாக ரூ. 2,700 வரை பெற்று கொரோனா காலத்திலும் சிறப்பாக துப்புரவு பணியை மேற்கொண்டனர். ஆனால் தற்போது ஆட்சியாளர்களுக்கு வேண்டிய நிறுவனத்திற்கு குப்பை அள்ளும் டெண்டர் வழங்கப்பட்டு, டன் ஒன்றுக்கு குப்பை அள்ள ரூ. 3,300–ம் அதை தரம் பிரித்து வழங்க ரூ. 1,200 என மொத்தம் ரூ. 4,500 வழங்கியும் முறையாக குப்பை அள்ளாமல் நகரம் சுத்தமில்லா சூழல் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் வரிப்பணத்தை கொள்ளை அடிக்கும் நோக்கோடு புதுச்சேரி அரசையும், துப்புரவு தொழிலாளர்களையும் ஏமாற்றி பணம் பறிக்கும் கிரீன் வாரியர் துப்புரவு நிறுவனத்தின் 19 ஆண்டுகால ஒப்பந்தத்தை புதுச்சேரி அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்ற நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். ஆனால் அரசு இதை கவனத்தில் கொள்ளவில்லை.

பொதுப்பணித்துறையும், நகராட்சியும் இணைந்து புதுச்சேரியில் இருக்கின்ற அத்தனை கால்வாய்களில் உள்ள குழாய்களை எல்லாம் மாற்ற வேண்டும் என்று மூன்று ஆண்டுக்கு முன் பிரச்சினை ஏற்பட்டபோது, புதுச்சேரியில் உள்ள அனைத்து கிராசிங் கால்வாய்களில் உள்ள குழாய்களை எடுத்து புதியதாக மாற்றுவோம் என்று சொன்னார்கள். ஆனால் செய்யவில்லை. நகர் பகுதி முழுவதும் 40 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட பாதாள சாக்கடை திட்டம் தோல்வியடைந்து சாக்கடை நீர் பூமியில் ஊறி தண்ணீர் மாசுப்பட்டிருக்கிறது. நகர் பகுதியில் ரூ. 50 கோடி செலவு செய்தும் பாதாள சாக்கடை திட்டம் முழுமை பெறவில்லை. இதனால் நகர் முழுவதும் கழிவுநீர் சாலையில் வழிந்தோடும் நிலை உள்ளது.

**புதிய தொழிற்சாலை எதுவும் புதுச்சேரிக்கு வரவில்லை!**

மின்துறையை தனியார் மயமாக்கும் விஷயத்தை தொடர்ந்து மக்களிடத்தில் மறைத்து அதை செயல்படுத்த அரசு துடிப்பது நியாயமில்லை. அந்த முடிவை அரசு கைவிட வேண்டும். அதானி துறைமுகத்தை புதுச்சேரி அரசு மீட்டெடுக்க வேண்டும். தொழில் வளர்ச்சியை மேம்படுத்த புதிய தொழில் கொள்கை சலுகை அடிப்படையில் உருவாக்கப்படும் என்றீர்கள். அப்படி ஏதும் அறிவிப்பு செய்யப்பட்டு அதன் மூலம் புதிய தொழிற்சாலை ஏதும் புதுச்சேரிக்கு வரவில்லை.

ஒன்றிய, மாநில அரசின் பங்களிப்புடன் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட ஆயுஷ்மான் காப்பீடு திட்டம் மக்களுக்கு பயன்பெறவில்லை. ஏழை, எளிய மக்களுக்கு கொடிய நோய் ஏற்பட்டால் அதற்கு சிகிச்சை அளிக்க பயன்படாத நிலையில் தான் அந்த காப்பீடு உள்ளது. அந்த கொடிய நோயில் இருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள முடியாமல் மக்கள் இறக்கும் நிலை தான் புதுச்சேரியில் உள்ளது. முதல்வர் புதுச்சேரி அரசு சார்பில் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படும் என்றார் அதுவும் இன்னும் செயல்பாட்டிற்கு வரவில்லை. இப்படி சட்டப்பேரவையில் அறிவித்த எந்த திட்டமும் செயல்படுத்தப்படவில்லை.

**பாதிக்கப்படுவது மக்கள்தான்!**

பொதுமக்களின் அவசர மருத்துவ சிகிச்சைக்கு என்று முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ. 15 ஆயிரம், ரூ. 25 ஆயிரம் என் வழங்கப்பட்டு வந்தது கூட கடந்த இரண்டு ஆண்டுகளாக நிறுத்தப் பட்டுள்ளது. முதல்வர் நிவாரண நிதிக்கு போதிய பணம் வருவதில்லையா? அல்லது கொடுப்பதற்கு முதல்வருக்கு மனமில்லையா என்று தெரியவில்லை. எது எப்படி இருந்தாலும் பாதிக்கப்படுவது மக்கள் தான் என்பதை அரசு உணர வேண்டும்.

கடந்த பெஞ்சல் புயல் போன்ற இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பேரிடர் நிதியில் இருந்து போதிய நிவாரணம் வழங்கப்படவில்லை. வீடுகள், உடமைகளை இழந்த குடும்பங்களின் தரவுகள் முழுமையாக சேகரித்து அவர்களுக்கு உரிய நிவாரணம் அரசால் இன்னும் வழங்கப்படாமல் உள்ளது. சென்ற மழை வெள்ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு கூட இன்னும் நிவாரணம் வழங்கவில்லை.

**வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்!**

புதுச்சேரியில் விவசாய காப்பீடு திட்டம் கேளிக்கூத்தாக உள்ளது. ஒன்றிய, மாநில அரசுகள் மூலம் விவசாயிகளுக்காக செலுத்தப்படும் காப்பீட்டுத் தொகை இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு முழுமையாக போய் சேராமல், காப்பீடு நிறுவனம் சாப்பிடும் நிலை உள்ளதை அரசு உணர வேண்டும். இதுகுறித்து கடந்த ஆறு மாதத்திற்கு முன்பே நாங்கள் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்றோம். ஆனால் அரசு வழக்கம்போல் மவுனம் காக்கிறது.

இப்படி ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் குறித்தும், சுகாதாரமற்ற குடிநீர் விநியோகத்தால் உயிரிழந்த குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்தும் விவாதிப்ப தற்காக பேரவையை குறைந்தது ஐந்து நாட்கள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை வைத்தோம். ஆனால் பேரவைத்தலைவர் பா.ஜ.க. கட்சிக்காரர்போல் செயல்பட்டு எதைப்பற்றியும் கவலைப்படாமல் எங்களை வெளியேற்றி உள்ளார். இது முற்றிலும் ஜனநாயகத்திற்கு எதிரானது ஆகும். பேரவையில் இருந்து வெளியேற்றினாலும் மக்களுக்கான எங்கள் போராட்டம் தொடரும் என்றார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு, முட்டம் கிராமத்தில் கடலூர் கிழக்கு மவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் 'ஓரணியில் தமிழ்நாடு' மூலம் கழகத்தில் இணைந்த புதிய உறுப்பினர்களுடன் இணைந்து தமிழகத்தை தலை நிமிர வைப்போம் என்ற தலைப்பில் உறுதிமொழி ஏற்கப்பட்டது. ஒன்றிய கழக செயலாளர் ஜெயமூர்த்தி, கிளை கழக தலைவர் ஆசிரியர் ராமமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.